செ.வெ.எண்: 41 நாள்: 15.03.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்கள் மண்ணில்லா பசும் புல் உற்பத்தி செய்யும் இயந்திரத்தினை பெற்று பயன்பெற வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மச்சுவாடியில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் ஹைட்ரோபோனிக் பாடர் எனப்படும் மண்ணில்லா பசும்புல் உற்பத்தி செய்யும் இயந்திரத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.03.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு கால்நடைகளுக்கு பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களை கண்டுபிடித்து அதன் மூலம் தீவன உற்பத்தியை பெருக்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மச்சுவாடியில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரின் விருப்புரிமை நிதியுதவித்திட்டத்தின் கீழ் ரூ.1 இலட்சம் நிதியுதவி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள ஹைட்ரோபோனிக் பாடர் எனப்படும் மண்ணில்லா பசும்புல் உற்பத்தி செய்யும் இயந்திரத்தில் ஆரம்பக்கட்ட செயல்பாடுகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த இயந்திரத்தில் ஹைட்ரோபோனிக் தொழில்நுட்பம் மூலம் 1 கிலோ மக்காச்சோள விதையிலிருந்து தகுந்த ஈரப்பதம் மற்றும் வெப்பநிலை கொடுத்து 1 வார காலத்தில் 7 கிலோ அளவு பசும்புல் உற்பத்தி செய்து கால்நடைகளுக்கு பசுந்தீவனமாக கொடுக்க முடியும். இதே போன்று நிலமற்ற கால்நடை வளர்ப்பவர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும்.

மேலும் ஹைட்ரோபோனிக் இயந்திரத்தில் கூடுதலாக சில மாற்றங்கள் செய்ய சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்கள் மண்ணில்லா பசும்புல் உற்பத்தி செய்யும் இயந்திரத்தின் செயல்பாட்டினை மண்டல ஆராய்ச்சி மையத்தில் நேரில் பார்வையிட்டு இந்த இயந்திரம் தேவைப்படுபவர்கள் மண்டல ஆராய்ச்சி மையத்தில் தெரிவித்தால் சம்மந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து விவசாயிகளுக்கு பெற்று வழங்கப்படும். எனவே அனைத்து விவசாயிகளும் ஹைட்ரோபோனிக் பாடர் இயந்திரத்தை பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மண்டல ஆராய்ச்சி மைய இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் திருமதி.லூர்துரீட்டா, உதவி பேராசிரியர் திரு.பரமசிவம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**